

அமரர்

# சின்னத்தம்பி சுப்பிரமணியம்

அவர்களின்

## 31ம் நாள் நினைவு குறித்த

# நினைவு மலர்

06.04.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# சின்னத்தம்பி சுப்பிரமணியம்

அவர்களது மறைவு குறித்த

# நினைவுமலர்

08.03.2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

அன்புக்கு இலக்கணமாய்
வாழ்ந்து
அனைவருக்கும் உதவிகள் பல
செய்து
குடும்பத்தை உயர வைக்க
உழைத்து
குலவிளக்காய் ஒளி வீசி –
இன்று
நலமிழந்து நாமெல்லாம் அலற
நல்லிறைவன்
தாளடைந்தீர்கள்!
உம் அன்பை மறவாத எங்கள்
தந்தை
அவர்களின் ஆத்மா இறைவன்
திருவடியில்
நித்திய சாந்தி பெற
வேண்டுமெனப்
பிரார்த்தித்து அவர் தம்
பாதங்களில்
கண்ணீர் நிறைந்த
காணிக்கைப் பூக்களை
சமர்ப்பணம் செய்கின்றோம்





இங்ஙனம்

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம்

18

11

1918

மறைவு

08

03

2010

# அமரர்
# சின்னத்தம்பி சுப்பிரமணியம்

**அவர்களின்**

**திதி நிர்ணயம்**

**சீராரும் விரோதி வருடம் சிறந்தொளிரும் மாசியில்**
**பேராரும் அபரபக்க அட்டமித்திதிநாள் – ஊராரும்**
**போற்றும் புகழ் சுப்பிரமணியம் இப்பாரினை நீத்து இறை**
**பொற்றாள் உற்றாரெனப் போற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணங்கள்





திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பண்: தக்கேசி                    சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது.

கற்பகத்தினைக் கனகமால் வரையைக்
காமகோபனைக் கண்ணுதலானனைக்
சொற்பதப் பொருள் இருள் அறுத்தருளுந்
தூயசோதியை வெண்ணெய் நல்லூரில்
அற்புதப்பழ ஆவணங் காட்டி
அடியனா என்னை ஆளது கொண்ட
நற்பதத்தை றள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்தென் நினைக்கேனே

## திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது.

என்னை அப்பா அஞ்சல் என்பவர் இன்றி
நின்று எய்த்து அலைந்தேன்
மின்னை ஒப்பாய் விட்டிடுதி கண்டாய்
உவமிக்கின்மெய்யே
உன்னை ஒப்பாய் மன்னும் உத்தர
கோச மங்கைக்கு அரசே
அன்னை ஒப்பாய் எனக்கு அத்தன் ஒப்பாய்
என் அரும்பொருளே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா



அம்பரா அனலா அனிலமே புவ நீ
அம்புவே இந்துவே இரவி
உம்பராலொன்று மறியாணா வணுவா
யொழிவற நிறைந்து வொண் சுடரே
மொய்ம்பராய் நலஞ்சொன் மூதறிவாளர்
முகத்தலையகத் தமர்ந்த தெனக்கே
யெம்பிரானாகி யாண்ட நீ மீண்டே
யெந்தை யுந் தாயு மாயினையே

## திருப்பல்லாண்டு

சேந்தனார் அருளியது

நிட்டயிலா உடல் நீத்து என்னை யாண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவன் அடியாரைச் சீராட்டும்
திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த்திக்கு என் அகம்நெகவூறும்
அமிர்தினுக்கு ஆலநிழல்
புட்டனுக்கு என்னைத் தன்பாற்படுத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

சேக்கிழார் சுவாமிகள் அருளியது.

கருப்பு வில்லோனைக் கூற்றை காய்ந்தவர் கடவூர் மன்னி
விருப்புறும் அன்பு மேன்மேல் மிக்கெழும் வேட்கை கூர

ஒருப்படும் உள்ளத்தன்மை உண்மையால் தனக்கு நேர்ந்த
திருப்பணி பலவும் செய்து சிவபத நிழலில் சேர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருப்புகழ்

அருணகிரிநாத சுவாமிகள் அருளியது.

இசைந்த ஏறம் கரியுரி போர்வையும் எழில் நீறும்
இலங்கு நூலும் புளியதளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் முடி மீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

# வாழ்த்து

காசியப்ப சிவாச்சாரியார் அருளியது.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

# தேற்றம்

ஔவையார் பாடியது

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ – மாநிலத்தீர்
வேண்டாம் நமக்கும் அதுவழியே நாம் போமளவும்
எமக்கென்ன என்று இட்டு உண்டிரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் அவர்களின் வாழ்க்கைச் சுவடுகள்.......

இந்து சமுத்திரத்தின் முத்தென விளங்கும் இலங்கைத்தீவின் வடபாகத்து தென்மராட்சி பிரதேசத்தின் மருதநிலம் சூழ தென்னம் சோலைகள் நிறைந்த ஆலயங்கள் சூழ்ந்த, சைவ சீலர்களும், கல்விமான்களும், பெருநிலக் கிழார்களும் வாழ்கின்ற உசன் பதியிலே சைவவேளார் மரபிலே சின்னத்தம்பி செல்லாச்சி தம்பதிகளுக்கு சிரேஷ்ட மகனான சுப்பிரமணியம் 18.11.1918 இல் அவதரித்தார்.

சின்னத்தம்பி - செல்லாச்சி தம்பதிகளுக்கு புதல்வர்களாய் கணபதிப்பிள்ளை, விநாசித்தம்பி, சிவஞானவதி, செல்லத்துரை ஆகியோர் இவரின் அருமைச் சகோதரர்களாக பிறந்தார்கள். இவர் தன்னுடைய இளமைக்கல்வியை அன்றைய காலத்து கல்வி முறையிலான திண்ணைப் பள்ளிப்படிப்பை உசன் பதியில் அமைந்துள்ள மடாலயத்தில் ஆரம்பித்தார். தொடர்ந்து உசன் சைவவித்தியாசாலை ஆரம்பமாக, அங்கே தன் கல்வியைத் தொடர்ந்து வந்தார். கல்வியி நாட்டம் மிகுந்தவராய் போக்குவரத்து மிக அரிதான அக்காலத்திலும் சாவகச்சேரி நகரிலுள்ள இந்துக்கல்லூரியில் SSC சித்தியடைந்தார்.

அமரர் சுப்பிரமணியம் அவர்கள் தனது கல்வியை அத்துடன் நிறுத்தி, தனது தந்தையின் விவசாயத் தொழிலிற்கு உதவியாக விவசாயத்தில் ஈடுபட்டார். அக்காலத்தில் தாய்வழி மாமன் மகளான பொன்னம்பலத்தின் சிரேஷ்ட புத்திரி செல்லம்மா அவர்களை திருமணம் புரிந்து கொண்டார். அமரர் சுப்பிரமணியம் அவர்களின் இல்லற வாழ்வு நல்லறமாகவே அமைய மூத்த குமரனாக சுவேந்திரநாதன், அவரைத் தொடர்ந்து அமரர் சுபந்திரவதனியும், பிறேமவதனியும் தவச்செல்வங்களாக பிறந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்தில் ஆக்கமும், ஊக்கமும் உடையவராகவும், செல்வச் செழிப்போடும் வாழ்ந்து வரும் காலத்தில் இவரின் அருமையினை உணர்ந்து 1956ம் ஆண்டு யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபராக விளங்கிய திரு. சபாரட்ணம் அவர்கள் பூநகரியிலுள்ள தனது தென்னம் தோட்டத்திற்கு முகாமையாராக நியமித்து 1982 வரை அவரின் பாராட்டிற்கும் மதிப்பிற்கும் உரியவராய் நேர்மையுடனுமாக சேவை யாற்றினார். தனது ஏக புத்திரனான சுபேந்திரநாதனுக்கு 1968ம் ஆண்டு தனது நெருங்கிய உறவினருள்ளே செல்வரதி என்னும் சீமாட்டியை திருமணம் செய்து வைத்தார். சுபேந்திரநாதன் – செல்வரதி தம்பதியினர் வழியே ஆறு பேரப்பிள்ளைகளையும் 12 பூட்டப்பிள்ளைகளையும் சீரும் சிறப்போடு வாழ இறுதிக்காலம் வரை கண்டு கேட்டு மகிழ்ந்தார். இவரின் அதிகூஷ்ட தேவதையான சுபத்திரவதனி கல்விகற்றும், பராயம் அடைந்தும் புதுமலர் என வாழ்ந்து வரும் காலத்தில் 1976ல் அமரத்துவம் எய்தியது அவர் வாழ்வில் பேரிடியாக வீழ்ந்தது. அவர் தனது கனிகூஷ்ட புதல்வியாகிய பிறேமவதனியை சிறப்பாக வளர்த்து எடுப்பதில் ஆறுதல் கண்டார்.

அவர் பிறேமவதனியை கல்வயல் பதியில் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியராக விளங்கிய துரைசிங்கத்தை மணமகனாக தெரிந்து திருமணம் செய்து வைத்தார் இவர்களின் வழித் தோன்றல்களாக துவாரகன், துளசிக்கா, கஜானனன் ஆகிய பேரப்பிள்ளைகள் உதித்தனர். இப்பேரப்பிள்ளைகள் கல்வி கலைகளில் உயர்ந்து மூவரும் பல்கலைக்கழக மாணவர்களாக விளங்குவதனைக் கண்டு மனம் மகிழ்ந்து வாழ்ந்து வந்தார். அவர் தம் மனம் மகிழ்வை வெளிநாட்டு பேரப்பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ளும் போது நீங்கள் உழைத்து வெளிநாட்டில் சிறப்பாக இருக்க இந்தப் பேரப்பிள்ளைகள் பல்கலைக்கழக கல்வி பெற்று புகழ் பெ உதவ வேண்டும் என்றெல்லாம் குலாவிக் கொள்வார்.

தன் மனைவி செல்லாம்மா அமரத்துவம் அடைய ஆன்மீகத்தை தலைக் கொண்டு வாழத் தொடங்கினார். இவர் தன் வாழ்வில் உசன் கந்தசாமி கோவில், புதுக்குள அம்மன் கோயில், ஐகேணிப்பிள்ளையார் கோயில் ஆகியவற்றில் 4ம் திருவிழா உபயகாரர், திருவெம்பாவை பூசை உபயகாரர், நவராத்திரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜை உபயகாராகவும், மாதப்பூஜை உபயகாரராகவும் தன் வருவாயின் ஒரு பகுதியை செலவழித்து மனத்திருப்தி கண்டு வாழ்ந்தார்.

இவர் நான்கு சகோதரர்களிற்கும் மூத்தவராகவும் இருந்தமையினால் அவர்களும் தம் வாழ்வில் உயர்த்த வழிசமைத்தும், திருமண உறவை பொருத்தமுற அமைத்தும் சகோதர உறவை மற்றோர் புகழும் வகையில் கொண்டாடியும் போற்றியும் வந்தார். அதனால் போலும் நான்கு சகோதரர்களும் அமரத்துவம் அந்த நிகழ்வை தான் கண்டு வாழ்ந்து இறுதியாக தான் அமரத்துவம் எய்தினார்.

இவர் வாழ்விலும் நாட்டின் யுத்த சூழல் இடப்பெயர்வு 2000ம் ஆண்டிலும், 2006ம் ஆண்டிலும் இடப்பெயர்வுக்கு உட்படுத்தியது. இடப் பெயர்வில் முதிர்ந்த காலத்தில் தான் கட்டிய மனையில் வாழமுடியாத நிலையும் இடத்துக்கிடம் அலைந்த வாழ்வும் அவர்தம் மனதை அதிகமாக பாதித்தது.

இவ்வாறு இருக்கும் போது சிறுநீரக கல்லடைசல் நோய்க்குள்ளாகி சத்திரசிகிச்சைக்கு ஆளாக வேண்டு என வைத்தியரின் ஆலோசனையைப் பெற்றும் முதுமை காரணமாக அதனை மேற்கொள்ள முடியாது நோயினால் தவித்தார். உசன் முருகன் மீது வைத்திருந்த இடையுறாத பக்தியும் அவர்தம் வாழ்வில் வாழ்ந்த வாழ்க்கை முறையிலும் சத்திரசிகிச்சைக்கு உட்பட வேண்டிய நோயிலிருந்து முற்றா அவரால் விடுபடமுடிந்தது. இதனால் நாள் தோறும் உசன் முருகன் பதியிலே பள்ளி எழுச்சி பாடி ஆலயக்கதவு திறக்கவும் ஊஞ்சல்பாடி திருக்கதவு மூடவும் ஆலயக்கிரியைகளில் தேவார பாராயணம் செய்யும் இவர் தவறாது இதனைச் செய்வதற்கு அவருக்கு இறையருளால் ஆளுகின்ற உடல் வலிமையும் இருந்தது எனலாம். இவ்வாறு ஆண்டவன் மீது கொண்ட ஆன்மீக பற்றோடு தான் அமைத்துள்ள சொந்தமனையிலே வாழ வேண்டும் என வாழ்ந்து வரும் காலத்தில் 28.02.2010 அன்று முதன் முறையாக இரத்த அழுத்தம் காரணமான உடல் சோர்வடைந்தார். இதன் காரணமாக சாவகச்சேரி, யாழ்ப்பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்தியாசலைகளில் அனுமதிக்கப்பட்டு இடது கால், கை என்பன பாதிக்கப்பட்டு இவர் நோயாளியானார். நோய் குணமடைந்த தன் காரணமாக

வைத்தியசாலையிலிருந்து வெளியேறி தன் சொந்த வீட்டினை 06.03.2010இல் வந்தடைந்ததார். இங்கிருக்கும் காலத்தில் தன் வீட்டில் 08.03.2010 திங்கட்கிழமை அதிகாலை 8 மணிக்கு உசன் பதி முருகனின் நினைவோடு மகன், பேரப்பிள்ளைகள் தரிசனத்தோடு அமரத்துவம் அடைந்தார்.

# சோகக் கவிதைத் துளிகள்.......

## மகன் சுபேந்திரநாதனின் சோகம்

என்னருமை அப்பா,...
என்னை சீராட்டி பாராட்டி வளர்த்தாய்...
கல்வி கற்க கல்லூரி செல்ல வைத்தாய்....
நல்ல வேலை நல்க வேண்டுமென்று
சொல்லொண்ணா நல்விரதம் இருந்தாய்....
மனை வாழ்க்கைதனை மாண்புற வைத்தாய்...
நினை மகிழ்விக்கும் நன் மக்கள் பேறு கண்டாய்...
தூலவுடல் நீத்து தொலைதூரம் சென்றாயோ
ஏல என்னை ஏங்கவிட்டு என் அன்னையிடம் சென்றாயோ?....
சரிபிழை பாராது செய்வன செய்வேன்
வரிப்பிழை வராது சொல்வது அறியேன்...
எல்லாப் பிழையும் பொறுத்து அருள்வாய் அப்பா
பொல்லாப்பு ஒன்றுமில்லை எப்பவோ முடிந்த காரியம்....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மகள் பிறேமாவின் புலம்பல்..

ஆடலிலும் பாடலிலும்
ஆக்கத்திறன் வேலையிலும்
ஆர்வமுடன் ஈடுபாடு கொள்ளச் செய்து
அவனியதை விட்டு
ஆறாத்துயரில் எனை ஆழ்த்தி
கூற்றுவனின் பின்னால்
குதூகலமாக சென்றுவிட்டீர்கள்
வாழ்க்கையில் முன்னேறி செல்வதற்கு
வழிபல கூறுனீர்கள் – நீங்கள்
நீண்ட காலம் வாழவேண்டுமென
நினைத்திருந்த எனக்கு
அவநம்பிக்கை யதை ஊட்டிவிட்டு – இறைவன்
அடியதனை எய்தி விட்டீர்களே!
எப்பதான் வருவீர்கள்
என் அருமை அப்பாவே!

## மைத்துனிகளின் தேறலாக.....

தாமே தமக்கு சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாம் ஆர்? எமது யார்? பாசம் ஆர்?
என்ன மாயம்? இவை போகக்
கோமன் பண்டைத் தொண்டரொடும்
அவன்தன் குறிப்பே குறி கொண்டு
போமாறு அமைமின்! பொய் நீக்கிப்
புயங்கள் ஆள்வான் பொன் அடிக்கே
(யாத்தரைப் பத்து)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் உருக்கம்

தந்தையைப் போல நீரே
பண்போடு துணையாய் நின்றீர்
மாமாவென அழைத்தெமக்கு
ஞானியென ஆகிவிட்டீர்
தக்கதெது தகாததெது
தயவுடனே காட்டி நின்றீர்
மருகரெமை மகிழ்வுடனே
மண்ணினிலே வாழ வைத்தீர்
பரிதவிக்கும் எம்மை விட்டு
பாதியிலே சென்று விட்டீர்
துன்பத்தில் பேத்தி.........
சேர் கலைகள் சேர்ப்பித்து
செவ்வெனவே வாழவைத்து
பயனேதும் கருதாமல்
பார் புகழை எனக்களித்து
பாவியெனை பாரினிலே விட்டுப்
பாதியிலே சென்றனையே...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சத்தில் நிலைத்த அன்பு நிஜத்தை சொல்ல
நீங்காத புன்முறுவல் துன்பம் செய்ய
பண்போடு வளர்த்தனையே உன்னை யெண்ணி
பரிதவிக்கும் பேத்தி முகம் பாராயோ தாத்தா

து. துளசிக்கா.

## பிரிவுற்ற பேரர்கள்

பார் போற்றும் பண்பினராய்
பேரரெமை ஆளாக்கி
சீரோடு பல கலைகள்
சேர்ப்பித்த தாத்தாவே!
தான் தூக்கி வளர்த்திட்ட
பேரர் தமை தவிக்க விட்டு
வான் புகுந்தாய் பாதியிலே
வாசலுக்கு வாராயோ?



T. துவாரகன்.
T. கஜானன்.

## உற்றார், உறவினர் உள்ளக் குமுறல்...

கோயில் வரலாறு சொன்னீர்கள் கோயில் கடவை
வாயில் வந்த தமிழ் வேதஒலி வழிவழிவந்தது
வாழையடி வாழையாக தொண்டு செய்து வாழ
ஏழையடி யோமுக்கு ஏற்றம்பல காட்டி வழி நடத்தினீர்கள்
பழம் பெரும் அடியவர்கள் பறந்து விட்டால்
விழப்போகுது ஊரின் வழமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாட்டு பேரர், பூட்டப்பிள்ளைகள் புலம்பல்



திரவியம் தேட திரை கடல் கடக்க விரும்பினீர்கள்
இரவு பகல் பாராது எம்மோடு உறவு கொண்டீர்கள்
பாசக் குழந்தைகள் எமை பரிதவிக்க விட்டு விட்டு
தேசம் விட்டு தேசம் விட்டு ஏகாந்தம் ஏகிவிட்டீர்கள்
தாத்தாவின் காலடியை தரணி தனில் காண்போமா
தத்திதிரியும் பூட்டப்பிள்ளைகள் எமை போட்டு விட்டீர்களே
பால் மொழிக் குரல் பேசும் பாலகர்கள் எம்மை
பார் விடுப்பீர்களோ பாவிகளோ நாங்கள்.

## பெறாமக்களின் ஆறாத்துயர்

எப்போதும் போலல்லாது படுத்து இருந்தீர்கள்
தப்பேதும் இல்லையென்று தலைநிமிர்ந்து இருந்தீர்கள்
வந்துவிட்டது கடைசி வருத்தம் என்றீர்கள்
நொந்து விட்டது உங்கள் உள்ளம்
வந்து போகின்றனர் சிவப்பு ராசன் என்றதும்
பேர்ந்து பார்க்க மாட்டீர்களென கை அசைத்தீர்கள்
இடைவிடாத கை யசைப்பு உங்கள் பிரியாவிடை
இடையறாத கையறு நிலை எங்கள் நிலை
தந்தைமுன் மைந்தர் ஓடி ஓல மிட்டு
இந்தவண்ணம் தவித்திடவோ
பெரிஐயா என்று எம் குலத்தலைவர் பெருமை பேசி
உரித்தான உடன்பிறப்பு மக்கள் யாவரும் உடன் வந்துவிட்டோம்
தெரியாதோ எங்கள் தொல்லைகள்
புரியாதோஎங்கள் அல்லல்கள்.......





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் மிகப்பெரியவை



1. உலகின் மகப்பெரிய தீவு எது?
   கிரீன்லாந்து
2. உலகில் சனத்தொகை கூடிய நகரம் எது?
   டோக்கியோ
3. உலகில் மிகப்பெரிய கடல் எது?
   தென்சீனக் கடல்
4. உலகில் மிகப்பெரிய நூதனசாலை எது?
   மியூசியம் ஒப் நெச்சூரல் ஹிஸ்டரி (நியூயோர்க்)
5. மிகப்பெரிய துறைமுகம் எது?
   ரோடார்டாம் - ஈரோம் போர்ட் ( நெதர்லாந்து)
6. மிகப்பெரிய பீடபூமி
   திபெத்
7. மிகப்பெரிய குடிதண்ணீர் ஏரி
   சுபீரியர்
8. மிகப்பெரிய பாலைவனம்
   சகாரா
9. மிகப்பெரிய தேவலாயம்
   உரோமாபுரியில் உள்ள சென்பீற்றஸ் தேவாலயம்
10. மிக உயர்ந்த கோபுரம்
    பிலான்ஸ் ஈபில் கோபுரம்
11. மிகப்பெரிய தனிநாடு
    பிரேசில்
12. மிகப்பெரிய வைரக்கல் சுரங்கம்
    கிமிபலி (தென்னாபிரிக்கா)
13. மிகப்பெரிய விரிகுடா
    ஹட்சன் விரிகுடா
14. மிகப்பெரிய டெல்டா
    சுந்தர்பன்டெல்டா
15. மிகப்பெரிய மலை
    இமயமலை (எவரெஸ்ட - சிகரம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நற்சிந்தனை

அன்பு காட்டு
ஆனால் அடிமையாகிவிடாதே

இரக்கம் காட்டு
ஆனால் ஏமாந்து போகாதே

பணிவாய் இரு
ஆனால் கோழையாய் இராதே

கண்டிப்பாய் இரு
ஆனால் கோபப்படாதே

சிக்கனமாய் இரு
ஆனால் கஞ்சனாய் இராதே

வீரனாய் இரு
அனால் போக்கிரியாய் இராதே

சுறுசுறுப்பாய் இரு
ஆனால் பதட்டப்படாதே

தர்மம் செய்
அனால் ஆண்டியாகி விடாதே

பொருளைத் தேடு
ஆனால் பேராசைப்படாதே



உழைப்பை நம்பு
ஆனால் கடவுளை மறவாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்





எங்கள் அன்புத் தெய்வம்
திரு.சின்னத்தம்பி சுப்பிரமணியம் அவர்கள்
காலமான செய்தி கேட்டு
ஓடோடிவந்து உதவிகள் செய்த உற்றார்
உறவினர்கள்,நண்பர்களுக்கும் அன்னாரின்
இறுதிக்கிரியையின் போது கலந்து
கொண்டோர்க்கும், கண்ணீர் அஞ்சலி
பிரசுரம் வெளியிட்டோருக்கும், தொலைபேசி
கடிதமூலம் தொடர்பு கொண்டு எம் துயரில்
பங்கு கொண்டோர்க்கும், அந்தியேட்டி
சபிண்டீகரக் கிரிகைகளைச் செய்த
ஆச்சாரியப் பெருந்தகைகளுக்கும்,
இம்மலரை அழகுற அச்சிட்டு உதவிய
அச்சகத்தாருக்கும் எமது மனமார்ந்த
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



இங்ஙனம்
குடும்பத்தினர்

ஆசீர்வாதம் வீதி,
உசன் மிருசுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

- *சின்னத்தம்பி + *செல்லாச்சி
  - **சுப்பிரமணியம்**
  - *கணபதிப்பிள்ளை + செங்கமலம்
  - *விநாசித்தம்பி + *நாகம்மா
  - *சிவஞானவதி + *ஏகாம்பரம்
  - *செல்லத்துரை + புவனேஸ்வரி
- * பொன்னம்பலம் + * அன்னபூரணம்
  - *செல்லம்மா
  - *சின்னத்தங்கம்


- சுப்பிரமணியம் + *செல்லம்மா
  - சுபேந்திரநாதன் + செல்வரதி
    - சுதர்சினி + சிவகுமார்
      - சஹானா
      - சப்னா
      - சஞ்சித்
    - செல்வகுமார் + சோபனா
      - றிகேஸ்
      - விகாஸ்
      - சேயோன்
    - நந்தகுமார் + மஞ்சுளா
      - றஸ்னா
      - நிசாப்
    - அஜந்தகுமார் + எல்வேறா
      - டேவிட்
      - டானியல்
      - நிசாந்
      - எல்லீனா
    - கேதீஸ்குமார்
    - கேதினி
  - *சுபத்திரவதனி
  - பிறேமவதனி + துரைசிங்கம்
    - துவாரகன்
    - துளசிக்கா
    - கஜானனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அதை வீணாக்குவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்து எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவனுடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொவருடையதாகும்
இந்த மாற்றமே உலக நியதியாகும்.




ஐஸ்வரியம் பதிப்பகம் டச்சு வீதி சாவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org